பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 15 திங்கட்கிழமை 28.03.2022 கதிர் 12

## உருவாகின்றது தேசிய அரசு; பிரதமராகின்றார் ரணில்!

### சிங்கள நாளிதழ் பரபரப்புச் செய்தி

பிரதமர் பதவியில் விரைவில் மாற்றம் வரக் கூடும் என அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டி சிங்கள நாளிதழ் ஒன்று இன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய நெருக்கடி சூழ்நிலையைச் சமாளிப்பதற்காக தேசிய ☞2

## யாழ்ப்பாணம் பண்பாட்டு மையம் இணைய வழி மூலமாகத் திறப்பு



(ந.லோகதயாளன், இ. கலையமுதன்)

யாழ்ப்பாணம் பண்பாட்டு மையம் இணைய வழி மூலமாக இன்று உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆகியோரால் நண்பகல் காணொளி முறையில் எளிமையாகத் திறந்துவைக்கப்பட்டது.

முதலில் சிங்களப் பெயர்ப் பலகை, அடுத்து ஆங்கிலப் பெயர்ப் பலகை, இறுதியாக தமிழ்ப் பெயர்ப் பலகை என்ற ஒழுங்கில் பெயர்ப்பலகைகள் பொறிக்கப்பட்டுள்ளமை ☞2

### தேசிய அரசில் பிரதமர் பதவியை

## பொறுப்பேற்கக் கோரினால் பரிசீலனை செய்யத் தயார்!

### ஐ.தே.க. தலைவர் ரணில் அறிவிப்பு



தேசிய அரசு தொடர்பாகவோ, அதில் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்பது தொடர்பிலோ அரச தரப்பில் இருந்து நேரடியாக என்னுடன் யாரும் எதுவும் பேசவில்லை. அவ்வாறான வேண்டுதல்கள் முன்வைக்கப்பட்டால் பரிசீலித்து முடிவெடுப்பேன். நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் எதையும் செய்யத் தயாராகவுள்ளேன்.

– இவ்வாறு முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

‘சர்வகட்சி மாநாட்டில் நீங்கள் ☞2

# கோட்டாவுடன் பேச்சு தொடரும்; அரைகுறைத் தீர்வை ஏற்கோம்!

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் திட்டவட்டம்



**நிரந்தரமான அரசியல் தீர்வைக் காண்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுடன் நாங்கள் தொடர்ந்து பேசுவோம். எனினும், அரைகுறையான அரசியல் தீர்வை நாங்கள் ஒரு போதும் ஏற்கவேமாட்டோம். இதை ஜனாதிபதியிடம் நேரில் எடுத்துரைத்தோம்.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.** ☞2

## இலங்கைக்கு இந்தியாவின் உதவிகள் தொடரும்!

### பஸிலைச் சந்தித்த பின் ஜெய்சங்கர் ‘டுவிட்’



இலங்கைக்கான இந்தியாவின் உதவிகள் தொடரும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெறும் ‘பிம்ஸ்டெக்’ மாநாட்டில் பங்கேற்பதற்காகக் கொழும்பு வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் இன்று முற்பகல் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை ☞2

## கூட்டமைப்பின் சதிகார வலைக்குள் ஜனாதிபதி கோட்டா சிக்கக்கூடாது!

### இப்படி வலியுறுத்துகின்றார் விமலின் சகா



விடுதலைப் புலிகளால் முடியாமல்போன ஈழக் கனவை அடைவதற்குத் தமிழ் டயஸ் போராக்கள் முயற்சிக்கின்றனர். அதற்கான நகர்வுகளையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்து வருகின்றது. கூட்டமைப்பு விரித்துள்ள சதிகார வலைக்குள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிக்கக்கூடாது. ☞2

### நீர்கொழும்பு பிரதான வீதியில்

## எரிபொருள் கோரி மக்கள் போராட்டம்



நீர்கொழும்பு பிரதான வீதியில் எரிபொருள் கோரி மக்கள் மாபெரும் போராட்டத்தில் இன்று ஈடுபட்டனர்.

மக்களின் போராட்டம் காரணமாக கொழும்பு - நீர்கொழும்பு ☞2

## புலம்பெயர் தமிழர்கள் மீதான தடைகள் விரைவில் விலகுமா?

### மீள்பரிசீலனை செய்வதாக அரசு அறிவிப்பு

புலம்பெயர் தமிழர்கள் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள் மீள்பரிசீலனை செய்யப்படும் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். ☞2

## விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் சாவு

யாழ்., கைதடிப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கைதடி மேற்கைச் சேர்ந்த சீ. ரவீந்திரன் (வயது 55) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கைதடி - கோப்பாய் வீதியில் கைதடி கலைவாணி வித்தியாலயத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் ☞2

## இலங்கையில் டெங்கு தாண்டவம்; 3 மாதங்களில் 7,947 பேர் பாதிப்பு!

இலங்கையில் இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 7 ஆயிரத்து 947 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த மூன்று மாதங்களில் அதிகூடிய டெங்கு நோயாளர்கள் ஜனவரி மாதத்தில் 5 ஆயிரத்து 397 ☞2

## கூட்டமைப்பின் சதிகார வலைக்குள் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டின் தற்போதைய நெருக்கடி சூழ்நிலையைப் பயன்படுத்தி தமது இலக்குகளை அடைவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கின்றது. இதன்காரணமாகவே ஜனாதிபதியுடன் கூட்டமைப்பினர் பேச்சு நடத்தியுள்ளனர்.

எதற்காக விசேட நிதியம் உருவாக்கப்பட வேண்டும்? ஈழம் என்ற இலக்கை அடைய வியூகம் வகுக்கப்படுகின்றது. இதற்காகவா எமது படையினர் உயிர்களைத் தியாகம் செய்தனர்? எனவே, கூட்டமைப்பு விரித்துள்ள சதிகார வலைக்குள் ஜனாதிபதி சிக்கக்கூடாது - என்றார்.

## புலம்பெயர் தமிழர்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலம்பெயர் தமிழர்கள் முதலீடு செய்ய வரவேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பிலும் இதனைச் சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால், புலம்பெயர் தமிழர்கள் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீது ராஜபக்ஷ அரசு ஆட்சிக்கு வந்ததும் தடைகளை விதித்திருந்தது. இந்தநிலையில் புலம்பெயர் தமிழர்கள் எவ்வாறு நாட்டுக்குள் வருவது? என்று கொழும்புச் செய்தியாளர் ஒருவர், வெளி விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

புலம்பெயர் தமிழர்கள் மற்றும் புலம்பெயர் அமைப்புக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளை அரசு மீள் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கின்றது. கூட்டமைப்புடனான சந்திப்பின் போதும் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது என்று பீரிஸ் குறிப்பிட்டார்.

## எரிபொருள் கோரி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான வீதியின் கப்புவத்தைப் பகுதி முடக்கப்பட்டது.

இதனால், வீதியின் இரு புறமும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியாத மக்கள் தமக்கு எரிபொருள் வழங்குமாறு கோரி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொலிஸார் வந்து பெரும் சிரமத்தின் மத்தியில் நிலைமையைக் கட்டுப்படுத்தினர்.

## விபத்தில் சிக்கிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சனிக்கிழமை இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்ற குறித்த குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார்.

அந்நிலையில், நேற்று ஞாயிற்றுக் கிழமை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## இலங்கையில் டெங்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேராகப் பதிவாகியுள்ளனர்.

பெப்ரவரி மாதத்தில் 1,826 நோயாளர்களும், மார்ச் மாதத்தில் 725 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதுவரையில் கொழும்பு மாவட்டத்தில் அதிகூடிய டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அதற்கமைய 1,433 பேர் கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, கம்பஹா மாவட்டத்தில் 903 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள நிலையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் 803 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் குருநாகலில் 761 டெங்கு நோயாளர்களும், புத்தளத்தில் 538 நோயாளர்களும், களுத்துறையில் 499 நோயாளர்களும் மற்றும் காலி மாவட்டத்தில் 456 பேர் டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளனர் என்றும் தொற்றுநோயியல் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## இலங்கைக்கு இந்தியா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இலங்கையின் பொருளாதார நிலைமை மற்றும் இந்தியாவின் ஆதரவு தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன என்று தனது ருவிட்டர் பக்கத்தில் ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

அயலவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இலங்கைக்கான உதவி தொடரும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கோட்டாவுடன் பேச்சு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியுடனான சந்திப்பு தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதியிடம் நாங்கள் தெரிவித்தோம். நியாயமான - நிரந்தரமான - நடைமுறைப்படுத்தக் கூடிய - அதியுச்ச அதிகாரப் பகிர்வு அடங்கிய ஓர் அரசியல் தீர்வு வராவிட்டால் அதை நாங்கள் ஏற்கமாட்டோம்.

இற்றை வரையில் நடைபெற்ற கருமங்களின் அடிப்படையில் - இற்றை வரையில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் நிரந்தரமான அரசியல் தீர்வைக் காணவேண்டும்.

இதற்காக அரசுடன் நாங்கள் வெளிப்படையாகத் தொடர்ந்து பேசத் தயார்.

தீர்வுக்கான எமது இந்த நிலைப்பாட்டில் நாங்கள் எப்போதும் உறுதியாக நிற்போம் என்றும், இதிலிருந்து ஒருபோதும் பின்வாங்கமாட்டோம் என்றும் ஜனாதிபதியிடம் கூறினோம்.

வடக்கில் அரச திணைக்களங்களாலும் இராணுவத்தாலும் அபகரிக்கப்பட்டுள்ள தமிழ்மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதியிடம் கோரினோம். பேச்சின் பின்னர் அது தொடர்பில் அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது என அறிந்தோம். எனினும், காணிகள் தாமதமின்றி படிப்படியாக விடுவிக்கப்பட வேண்டும். - என்றார்.

## பொறுப்பேற்கக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்ட பின்னர், மக்கள் மத்தியில் ஓர் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. இந்தப்பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்கக் கூடியவராக தங்களைக் கருதுகின்றார்கள். இவ்வாறான சூழலில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்வும், தங்களைத் தேசிய அரசின் பிரதமராக நியமிக்க முயன்று வருகின்றார் எனவும், அதற்கு முன்னோடியாகவே அன்றைய கூட்டத்தில் தங்களிடம் மன்னிப்புக் கோரினார் எனவும் கூறப்படுகின்றது. அவ்வாறான முயற்சிகள் இடம்பெறுகின்றனவா? அவ்வாறான பொறுப்பு உங்களிடம் முன்வைக்கப்பட்டால் நீங்கள் பதவியை ஏற்றுக்கொள்வீர்களா? என்று கொழும்புச் செய்தியாளர் ஒருவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அவர்,

நாட்டினதும் மக்களினதும் நலன் கருதியே சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்றேன். இந்த மாநாட்டைக் கூட்டச் சொல்லி பல மாதங்களுக்கு முன்னரே அரசிடம் கோரியிருந்தேன். காலம் தாழ்த்தியாவது மாநாட்டைக் கூட்டிப் பிரச்சினைகளை ஆராய்ந்திருக்கின்றார்கள். எனது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளேன். அரசு எடுக்கப்போகும் நடவடிக்கைகளைப் பொறுந்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தேசிய அரசு தொடர்பாக அரச தரப்பில் இருந்து நேரடியாக என்னுடன் யாரும் எதுவும் பேசவில்லை. அப்படியான வேண்டுதல்கள் முன்வைக்கப்பட்டால் பரிசீலித்து முடிவெடுப்பேன். நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் எதையும் செய்யத் தயாராகவுள்ளேன் - என்றார்.

## யாழ்ப்பாணம் பண்பாட்டு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கல்வியமைச்சர் தினேஷ் குணவர்தன, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண் டமான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாண பண்பாட்டு மையத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அரசாங்க அதிபர்கள் , மத குருமார்கள், மாநகர சபை உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாண பண்பாட்டு மையம் வெகுவிமரிசையாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியினால் திறந்து வைக்கப்பட்ட பின்னரே பொதுமக்கள் பாவனைக்காக கையளிக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

## உருவாகின்றது தேசிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசொன்று நிறுவப்படும் எனவும், அதில் பிரதமர் பதவி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்படவுள்ளது எனவும் அந்தச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ஒத்துழைப்பைப் பெறும் நோக்கிலேயே இந்த நகர்வு முன்னெடுக்கப்படுகின்றது எனவும் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டிலும் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ரணில் விக்கிரமசிங்க 1994ஆம் ஆண்டு முதல் 4 தடவைகளுக்கு மேல் பிரதமர் பதவியை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு – தொலைபேசி இலக்கம்- 076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பேச்சுக்கு இடம் அளியுங்கள்!

ஆங்கிலத்தில் ஒரு முதுமொழி உண்டு. 'Too many cooks spoil the soup' என்பார்கள். பல சமையல்காரர்கள் சேர்ந்து தம்தம்பாட்டிற்கு இழுத்தால் சமையல் கெட்டுவிடும் என்பது இதன் அர்த்தம். ஒரு வண்டிலை நான்கு மாடுகள் தத்தம் திசைக்கு விரும்பியபடி இழுக்குமானால் பயணம் நடக்காது. வண்டிதான் உடைந்து போகும்.

அரசுடன் அல்லது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடங்கி இருக்கும் பேச்சு தொடர்பில், அதற்கு மருத்துவம் பார்க்கும் வைத்தியர்கள் எண்ணிக்கை எண்ணுக்கணக்கின்றி அதிகரித்துவிட்டது.

ஒவ்வொரு அரசியல்வாதியும் தத்தமது பாணியில் வைத்தியம் கூறிக் கொண்டிருக்கின்றார்கள். அவற்றையெல்லாம் கணக்கில் எடுத்தால் 'சத்திரசிகிச்சை வெற்றி; நோயாளி அவுட்' என்ற கதை மாதிரி பேச்சு முயற்சியே செத்துவிடும் என்பதுதான் உண்மை.

"சர்வதேச மத்தியஸ்தத்துடன்தான் போய்ப் பேச வேண்டும். இந்தியாவோ, அமெரிக்காவோ இலங்கை அரசுடன் பேச்சு நடத்துங்கள் என்று கூறினால், 'நாம் பேசுகின்றோம்; நீங்கள் மத்தியஸ்தம் வகிக்க வாருங்கள்' என்று அவற்றிடம் தமிழர் தரப்பு கூற வேண்டியதுதானே" – என்கிறார் நமது 'ஃபயர் பிராண்ட்' அரசியல்வாதி சிவாஜிலிங்கம்.

"பேச்சுக்குப் போயிருக்க கூடாது. பேச்சுக்கு நிபந்தனைகள் விதித்திருக்க வேண்டும். நல்லெண்ண சமிக்ஞைகள் சிலவற்றை வெளிப்படுத்துமாறு கட்டாயப்படுத்தி இருக்க வேண்டும்" – என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டு, அதன் காரணமாக பேச்சில் பங்குபற்றுவதில் இருந்து நேரத்துடனே விலகியது கூட்டமைப்பின் பங்காளி கட்சியான ரெலோ.

முதலாவது பேச்சை அடுத்து அந்தப் பேச்சைத் தொடர்வதற்கு சில நல்லெண்ண சமிக்ஞைகளை வெளிப்படுத்துமாறு கூட்டமைப்பு வலியுறுத்தியது என்ற செய்தி – தகவல் – வெளியானதும் அந்த நிபந்தனையில் 'அது சொத்தை', 'இது தவறு' என்று இப்போது குறை கூறுகின்றது ரெலோ.

"அரசமைப்பில் இருக்கும் 13 ஆவது திருத்தத்தையாவது முழுமையாக நடைமுறைப்படுத்தும்படி சம்பந்தன் கூறி இருக்கலாம்" என்றும் குறை கூறப்பட்டது. உண்மையில் அதை அந்த பேச்சில் அழுத்தந்திருத்தமாக சம்பந்தன் வலியுறுத்தி இருந்தார்.

அதற்கிடையில் இன்னொரு அரசியல் விமர்சகர் "13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த கேட்பது தவறு." – என்று வேறு வியாக்கியானம் கூறுகின்றார்.

பேச்சு மேசைக்கு வெளியில் நின்று கொண்டு இவர்கள் எல்லோரும் அடிக்கும் விமர்சனத் தவிலைக் கேட்டால் காது பிய்ந்து விடும் போல இருக்கின்றது.

இந்தச் சில்லெடுப்புகள் எல்லாவற்றிற்கும் பதில் தரும் விதத்தில் இப்போது கருத்து வெளியிட்டிருக்கிறார் சம்பந்தன்.

"நிரந்தரமான அரசியல் தீர்வைக் காண்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுடன் நாங்கள் தொடர்ந்து பேசுவோம். எனினும், அரைகுறையான அரசியல் தீர்வை நாங்கள் ஒருபோதும் ஏற்கவே மாட்டோம்." இதை ஜனாதிபதியிடமே நேரில் எடுத்துரைத்தோம். – என்று தெளிவாகக் குறிப்பிடுகிறார் சம்பந்தன்.

மக்களின் உடனடிப் பிரச்சினைகள், அரசியல் தீர்வு என்ற இரண்டு அடுக்கில் பேச்சை முன்னெடுக்கின்றார் சம்பந்தன்.

இலங்கை அதிகார பீடத்துடன் தீர்க்கமாக ஊடாடுவதை தவிர வேறு மார்க்கம் இன்றைய நிலையில் தமிழர்களுக்கு இல்லை. அதைத் தமிழர்கள் தலைமை முன்னெடுப்பதற்கு சற்று இடம் கொடுத்து, இடைவெளி வழங்கி, தள்ளி நில்லுங்கள் – ஆளாளுக்கு அதிகப்பிரசங்கித்தனம் பண்ணி பேச்சு முயற்சிகளைக் கெடுத்து விடாமல்.

# யாழ்.போதனாவில் குருதித் தட்டுப்பாடு!

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் எல்லா வகை குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நோயாளர்களுக்குத் தேவையான குருதியை வழங்க முடியாத ஆபத்தான நிலையில் இரத்த வங்கி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரத்த வங்கியில் சராசரியாக இருக்க வேண்டிய குருதியின் அளவு 330 பைந்த் ஆகும். ஆனால் தற்போது இரத்த வங்கியில் 167 பைந்த் குருதி மட்டுமே இருக்கின்றது.

இது இன்னும் நான்கு நாள்களில் முடிந்துவிடும். சராசரியாக நாளொன்றுக்கு 35 – 40 பைந்த் குருதி நோயாளர்களுக்கு இரத்த வங்கியிலிருந்து விநியோகிக்கப்படுகின்றது.

திட்டமிட்டபடி நடக்கவிருந்த இரத்ததான முகாம்கள் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் எதிர்பார்க்காத வகையில் எல்லா வகை குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நடைபெற்ற இரத்ததான முகாம்களிலும் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு காரணமாக குறைந்தளவு குருதிக்கொடையாளர்கள் மட்டுமே இரத்ததானம் செய்கின்றார்கள்.

ஆகவே இரத்த வங்கியில் அல்லது இரத்ததான முகாம்களில் ஏற்கனவே இரத்ததானம் செய்து நான்கு மாதங்கள் பூர்த்தியானவர்களும் புதிதாக இரத்ததானம் செய்யக்கூடியவர்களும் இந்த ஆபத்தான நிலையைத் தவிர்ப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இரத்தவங்கி அழைப்பு விடுத்துள்ளது.

இரத்ததானம் செய்வதற்கான அடிப்படை தகுதிகளாக, 18 – 55 வயது வரை ஏற்கனவே இரத்ததானம் செய்திருந்தால் அவர்கள் 60 வயது வரை இரத்ததானம் செய்யலாம், குறைந்தது 50 கிலோ நிறையைக் கொண்டிருத்தல், ஈமோகுளோபினின் அளவு 12.5 ஆக இருத்தல், ஏற்கனவே இரத்ததானம் செய்திருந்தால் 4 மாதங்கள் பூர்த்தியாக வேண்டும், கொரோனா தடுப்பூசி ஏற்றியிருந்தால் 7 நாள்களின் பின்னர் இரத்ததானம் செய்யலாம் என்பன குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இரத்த தானம் செய்ய விரும்புபவர்களோ அல்லது இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்ய விரும்புபவார்களோ 0772105375 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு உயிர் காக்கும் பணியில் இணைந்து கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# பொலிஸ் நிலையத்தில் நள்ளிரவில் மாயமாகின இரண்டு டிராக்டர்கள்



முல்லைத்தீவு – நட்டாங்கண்டல் பொலிஸ் நிலையத்தில் சான்றுப் பொருள்களாக ஒப்படைக்கப்பட்ட இரு டிராக்டர்கள் நள்ளிரவு வேளையில் மின்தடையின் போது பொலிஸ் நிலையத்தில் இருந்து மாயமாகியுள்ளன.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்துக்குட்பட்ட பறங்கியாற்றில் கடந்த வெள்ளிக்கிழமை பகல் 11 மணியளவில் சட்டரீதியற்ற முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட இரு டிராக்டர்களையும், அதன் சாரதிகளும் நட்டாங்கண்டல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மாலை 4 மணியளவில் நட்டாங்கண்டல் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்யும் வகையில் டிராக்டர்கள் இரண்டும் சான்றுப் பொருள்களாக வைக்கப்பட்டிருந்தன.

மேற்படி டிராக்டர்கள் இரண்டும் அன்றையதினம் இரவு 11மணியளவில் மின் தடை நேரத்தில் பொலிஸ் நிலையத்தில் இருந்து மாயமாகியுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை தெடர்பு கொண்டபோது தவறு ஒன்று இடம்பெற்றுள்ளது என்று பதிலளித்துள்ளார்.

# ஊழியர்கள் - பொதுமக்கள் இடையே எரிபொருள் நிரப்புநிலையத்தில் முறுகல்





இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள்நிலையத்தில்மண்ணெண்ணெய் வழங்குவதில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளதையடுத்து பொதுமக்களுக்கும் எரிபொருள் நிலையத்தின் ஊழியருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் வவுனியா மன்னார் வீதி வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன எரிபொருள் நிலையத்தில் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேற்படி எரிபொருள் நிலையத்துக்கு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 6 ஆயிரத்து 600 லீற்றர் மண்ணெண்ணெய் மற்றும் 13 ஆயிரத்து 200 லீற்றர் டீசல் தாங்கிய பவுஸர் ஒன்று வருகை தந்திருந்தது.

வாகனங்களுக்கு டீசல் முழுமையாக நிரப்பப்படுவதுடன் ஒரு நபருக்கு 1,000 ரூபாவிற்கு என்ற அடிப்படையில் களன்களில் மண்ணெண்ணெய் வழங்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ள நீண்டவரிசையில் மக்கள் காத்திருந்த சமயத்தில் இடையில் வந்தவர்களுக்கு எரிபொருள்நிலையஊழியர்மண்ணெண்ணெய் வழங்கினார் எனத் தெரிவித்து வரிசையில் நின்ற மக்கள் எரிபொருள் நிலைய ஊழியருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டமையுடன் இருவருக்கிடையே வாய்த்தர்க்கம் நீடித்தது.

இதனையடுத்து அந்த இடத்துக்கு வருகை தந்த எரிபொருள் நிலையத்தின் முகாமையாளர் இடையில் மண்ணெண்ணெய் பெற்றுக்கொண்டார் என தெரிவிக்கப்படும் நபரை வெளியேற்றியமையையடுத்து நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

# கொரோனா வைரஸால் உலக அளவில் உயிரிழப்பு 61.4 லட்சத்தைத் தாண்டியது



உலகம் முழுவதும் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 61.47 லட்சத்தைத் தாண்டியது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 6,147, 840 பேர் கொரோனா வைரஸால் உயிரிழந்தனர். உலகம் முழுவதும் கொரோனாவால் 481,857,073 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 416,241,391 பேர் குணமடைந்துள்ளனர். மேலும் 58, 732 பேர் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.





# உக்ரைன், ரஷ்யா இடையேயான அடுத்த கட்ட அமைதி பேச்சு துருக்கியில் இன்று நடக்கிறது

துருக்கியில் உக்ரைன், ரஷ்யா இடையேயான அடுத்த கட்ட அமைதிப் பேச்சு இன்று தொடங்குகிறது. இரு நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர்கள் பேச்சு நடத்த உள்ளனர். உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து நான்கு வாரங்களைத் தாண்டியும் போர் நீடித்து வருகிறது. இருதரப்பிலும் பொதுமக்கள், வீரர்கள் என பலர் உயிரிழந்துள்ளனர்.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் பாதுகாப்பு தேடி உக்ரைனில் இருந்து வெளியேறி வருகின்றனர். போர் நிறுத்தம் தொடர்பாக உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையே பெலாரசில் இதுவரை நடைபெற்ற 3 கட்ட அமைதி பேச்சும் தோல்வியில் முடிந்தது. இதற்கிடையே, துருக்கியில் ரஷ்ய வெளியுறவுத்துறை மந்திரி செர்ஜி லாவ்ரோவ் மற்றும் உக்ரைன் வெளியுறவுத்துறை மந்திரி டிமிட்ரோ குலேபா ஆகியோர் பேச்சு நடத்தினர்.

துருக்கியில் நடந்த இந்தப் பேச்சில் எவ்வித முன்னேற்றமும் இல்லை என உக்ரைன் வெளியுறவுத்துறை மந்திரி டிமிட்ரோ குலேபா தெரிவித்தார். இந்நிலையில், போர் நிறுத்தம் தொடர்பாக உக்ரைன், ரஷ்யா இடையே துருக்கியில் 2ஆவது கட்ட அமைதி பேச்சு இன்று நடைபெறுகிறது என உக்ரைன் மந்திரி டேவிட் அரகாமியா சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

# சீன நாட்டின் முதலீட்டைப் பெறுவதற்கு புத்தர் சிலைக்கு பாதுகாப்பளிக்கும் தலிபான்

ஆப்கானிஸ்தானின் மெஸ் அய்னாக் பகுதியில் உள்ள தாமிர சுரங்கம் உலகின் மிகப் பெரிய தாமிர சுரங்கமாக கருதப்படுகிறது. இதில் இருந்து 1.2 கோடி தொன் தாமிரம் எடுக்க சீன அரசுடன் கடந்த 2008ம் ஆண்டில் ஆட்சியில் இருந்த ஹமீத் கர்சாய் 30 ஆண்டு கால கூட்டு ஒப்பந்தம் செய்து இருந்தார். இந்த ஒப்பந்தம் தொடக்க பணியுடன் நிறுத்தப்பட்டது. பின்னர், ஆப்கானிஸ்தானில் கடந்த 2014ம் ஆண்டில் ஏற்பட்ட தொடர் வன்முறை காரணமாக சீன அதிகாரிகள், ஊழியர்கள் அங்கிருந்து வெளியேறினர். இந்நிலையில், கடந்தாண்டு ஓகஸ்ட் மாதம் ஆப்கானில் ஆட்சியை கைப்பற்றிய தலிபான்கள், உலக நாடுகளின் பல்வேறு பொருளாதாரத் தடைகளினால் கடும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளனர். இதில் இருந்து தப்புவதற்கு, சீனா உடனான இந்த ஒப்பந்தத்தை தலிபான் அரசு புதுப்பிக்க உள்ளது.

இதற்காக, கடந்த 2008ம் ஆண்டு ஒப்பந்தத்தில் அளிக்கப்பட்ட அனைத்து சலுகைகளையும் வழங்குவதாக கூறியுள்ளது. இந்த ஒப்பந்தத்தை சீனா மீண்டும் தொடங்கினால், ஆப்கானிஸ்தானுக்கு ரூ.76.29 லட்சம் கோடி முதலீடு கிடைக்கும்.

இது தவிர, மேலும் பல நேரடி, மறைமுக சீன முதலீடுகள் ஆப்கானிஸ்தானுக்கு கிடைக்கும். இதன் மூலம் சரிவடைந்துள்ள பொருளாதாரத்தை நிலை நிறுத்தி கொள்ள தலிபான் அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.

சீனாவின் இந்த முதலீட்டை பெறுவதற்கு அந்நாட்டின் நன்மதிப்பை பெறும் வகையில், 20 ஆண்டுகளுக்கு முன் தனது முதல் ஆட்சி காலத்தில் அழிக்கப்பட்ட புத்தரின் ஆழ்நிலை தியான சிலைகள். முதலாம் நூற்றாண்டில் புத்த பிட்சுகளால் கட்டப்பட்டு சேதமடைந்த புத்த மடங்களுக்கு தலிபான் அரசு ராணுவ வீரர்களை நிறுத்தி பாதுகாப்பு அளித்து வருகிறது.



## சிறந்த நடிகருக்கான ஒஸ்கார் விருதை வென்றார் ஸ்மித்

சிறந்த நடிகருக்கான ஒஸ்கார் விருதை கிங் ரிச்சர்ட் படத்திற்காக வில் ஸ்மித் வென்றார். சிறந்த இயக்குநருக்கான ஒஸ்கார் விருதை தி பவர் ஆப் தி டாக் படத்திற்காக ஜேன் கேம்பியன் வென்றார்.

# தனது மனைவியின் தோற்றத்தை கிண்டல் செய்த நடிகரின் கன்னத்தில் அறைந்தார் வில் ஸ்மித்

## ஒஸ்கர் விழாவில் பரபரப்பு!!



ஒஸ்கர்விருதுவழங்கும்விழாவில் நடிகர் வில் ஸ்மித், நகைச் சுவை நடிகர் கிறிஸ் ராக்கினை மேடையிலேயே தாக்கியமை பரபரப்பை ஏற்படுத்தியது. 94வது ஒஸ்கர் விருது வழங்கும் விழா அமெரிக்காவில் லாஸ்ஏஞ்செல்ஸ்நகரில்நடைபெற்றது. இந்த ஒஸ்கர் விருது வழங்கும் விழாவில் சிறந்த நடிகருக்கான விருதை பெற்ற வில் ஸ்மித்தின் மனைவி, முடி உதிர்தல் தொடர்பான அலோபீசியா நோயால் தலையில் முடியின்றி காணப்பட்டார்.

இந்த நிலையில்விழாவின் போது, சிறந்த ஆவணப்படத்திற்கான விருதினை வழங்க பிரபல நகைச்சுவை நடிகர் கிறிஸ் ராக் மேடைக்கு வந்தார். அப்போது வில் ஸ்மித்திடம் பேசிய அவர், ஸ்மித்தின் மனைவி ஜடா பிங்கெட் ஸ்மித்தின் சிகை அலங்காரம் குறித்து விமர்சித்தார். 1997ம் ஆண்டில் வெளியான ஜி.ஐ. ஜேன் திரைப் படத்தில் நடித்த நடிகை டெமி மூரின் சிகை அலங்காரத்துடன் ஒப்பிட்டு அவரை கேலியாக பேசினார்.

இதனால் கோபம் அடைந்த நடிகர் வில் ஸ்மித், மேடைக்கு சென்று கிறிஸ் ராக்கின் முகத்தில் பளாரென அறைந்து, விழா அரங்கை அதிர்ச்சிக்குள்ளாக்கினார். வில் ஸ்மித் தனது இருக்கைக்கு திரும்பிய பின்னரும் ராக் விமர்சித்ததை தொடர்ந்தார். இதனால் ஆத்திரத்தின் உச்சிக்கு சென்ற ஸ்மித், அங்கிருந்தபடியே 'என் மனைவியின் பெயரை உன் வாயிலிருந்து விலக்கிவிடு' என மோசமான வார்த்தைகளால் கிறிஸ் ராக்கினை யேசினார்.

## 32ஆவது நாளாக நீடிக்கும் போர்

# எல்லை நகரங்களை மீண்டும் கைப்பற்றுகின்றது உக்ரைன்



போர் நீடித்துவரும் நிலையில் எல்லை நகரான டிரோஸ்டியாமேட்ஸை உக்ரைன் படைகள் மீண்டும் தங்கள் வசமாக்கியுள்ளன. ரஷ்யா - உக்ரைன் இடையிலான போர் 32ஆவது நாளாக நீடித்து வருகிறது.

இந்நிலையில் ரஷ்ய படைகள் கடந்த முதலாம் திகதி கைப்பற்றிய துமி ஒப லாஸ் மகாணத்தில் உள்ள எல்லை நகரம், டிரோஸ்டியாமேட்ஸை உக்ரைன் படைகள் மீண்டும் தங்கள் வசமாக்கியுள்ளன.

அங்கு ரஷ்ய படைகள் விரட்டியடிக்கப்பட்டன என உக்ரைன் பாதுகாப்பு அமைச்சகம்அறிக்கைவெளியிட்டுள்ளது. இதனிடையே மாறியபோல் நகரை தக்கவைக்க தேவையான ஆயுதங்களை வழங்க முன்வர வேண்டும் என்று உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி வலியுறுத்தியுள்ளார். உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்க அமெரிக்க தயக்கம் காட்டுவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

செர்னிஹிவ் அணுமின்நிலைய ஊழியர்கள் குடியிருப்பு பகுதியை ரஷ்ய படைகள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளன. அப்போது நிகழ்ந்த தாக்குதலில் 3 பேர் கொவ்வப்பட்டனர். இந்நிலையில் செர்னிஹிவ் அணு மின் நிலையத்தை தீவிர கண்காணிப்பில் வைத்துள்ளதாக சர்வதேச அணுசக்தி கழகம் தெரிவித்துள்ளது.

வடக்கு உக்ரைனில் செர்னிஹிவ் நகரம் ரஷ்ய படைகளால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. அந்த நகரம் மற்றொரு மரியபோல் ஆக மாறும் நிலை உள்ளது. அங்குள்ள மக்கள் குடிதண்ணீருக்கும், உணவுக்கும் பெரும் இன்னலுக்கு ஆளாகியுள்ளனர்.

இந்நிலையில் ரஷ்ய படைகளால் தாக்கப்பட்ட எண்ணெய் சேமிப்பு கிடங்கு மீது ரஷ்யா நடத்திய தாக்குதல் குறித்த செயற்கைகோள்படம்வெளியாகியுள்ளது.






# இந்திய மத்திய அரசாங்கத்துக்கு எதிராக தொழிற்சங்கங்கள் இருநாள் வேலைநிறுத்தம்

இந்திய மத்திய அரசின் பொருளாதார கொள்கைகள், தொழிலாளர் விரோத திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து தொழிற்சங்கங்கள் 2 நாள் போராட்டத்துக்கு வேலை நிறுத்தத்தை அறிவித்துள்ளன.

தொழிலாளர் குறியீடு, தேசிய பணமாக்கல் திட்டம், தனியார்மயம் போன்றவற்றை கைவிடுதல், தேசிய ஊரக வேலை உறுதி திட்ட ஊதிய உயர்வு, ஒப்பந்த தொழிலாளர்களை முறைப்படுத்துதல் உள்ளிட்ட12அம்சகோரிக்கைகளை வலியுறுத்தி பல்வேறு தொழிற் சங்கங்கள் இணைந்த அகில இந்திய தொழிற்சங்க கூட்டமைப்பு இந்த 2 நாள் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தது.

இதன்படி இன்று காலை 6 மணிக்கு தொழிற்சங்கங்களின் வேலைநிறுத்தம் தொடங்கியது. நாளை மறுதினம் 30ஆம் திகதி காலை 6 மணி வரை இந்த வேலைநிறுத்தம் நடைபெறவிருக்கிறது. இந்த இரு நாள் வேலை நிறுத்தத்தில் இந்தியா முழுவதும் 20 கோடிக்கும் அதிகமான அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்கள் பங்கேற்றுள்ளனர் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

நிலக்கரி, உருக்கு, எண்ணெய், தொலைத்தொடர்பு, தபால், வருமான வரித்துறை, செம்புத்துறை, வங்கிகள், மின்சாரம், காப்பீடு என பல்வேறு துறைகளில் செயல்பட்டு வரும் தொழிலாளர் அமைப்புகள் இந்த நாடு தழுவிய வேலை நிறுத்தத்தில் பங்கேற்கின்றன. நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, மின்சாரம் போன்ற துறைகளின் தொழிலாளர்களும் இந்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் பங்கேற்பதாக அனைத்து இந்திய வங்கி ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

தொழிற்சங்கங்களின் வேலை நிறுத்தத்தால் மக்கள் பாதிக்கப்படாத வகையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

## தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தம் தமிழகத்திலும் பொதுமக்கள் அவதி



மத்திய அரசுக்கு எதிராக தொழிற்சங்கங்கள் நடத்தும் இரு நாள் வேலைநிறுத்த போராட்டம் இன்று காலை 6 மணி முதல் நடைபெற்று வருகிறது. இந்தப் போராட்டம் கரணமாக தமிழகம் முழுவதும் குறைந்த அளவே பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

மதுரை, விழுப்புரம், விருதுநகர், திருவண்ணாமலை, நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் பேருந்து சேவைபாதிக்கப்பட்டுள்ளது. பேருந்து நிலையங்களில் பெருமளவில் பயணிகள் காத்திருக்கும் நிலை காணப்பட்டது. சென்னையில் பேருந்துகள் சரிவர இயங்காததால் பொதுமக்கள் அவதிக்குள்ளாயினர்.

மதுரையில் தினமும் 900 பேருந்துகள் இயக்கப்படும் நிலையில், தொழிற்சங்கங்களின் போராட்டத்தையொட்டி இன்று 400 பேருந்துகள் மட்டுமே இயக்கப்பட்டு வருகின்றன என தகவல்கள் தெரிவிக்கின்றன. பேருந்து சேவை பாதிப்பால் காலையில் பாடசாலை, கல்லூரிக்கு செல்லும் மாணவ, மாணவிகள்,வேலைக்கு செல்வோர் அதிகம் பாதிக்கப்பட்டனர்.

தமிழகத்தில், இந்த வேலைநிறுத்த போராட்டத்துக்கு, தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன. ஆனாலும், போராட்டத்தில் தமிழக அரசு ஊழியர்கள் பங்கேற்றால் சம்பளம் பிடித்தம் செய்யப்படும் என்று தலைமைச் செயலாளர் வெ. இறையன்பு எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## இந்தியாவில் மீண்டும் தொடங்கியது சர்வதேச விமானப் போக்குவரத்து

இந்தியாவில் கொரோனா பரவல் தொடங்கியதும் அதை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக கடந்த 2020 ஆண்டு மார்ச் 23 ஆம் திகதி முதல் சர்வதேச விமானங்களின் இயக்கத்திற்கு மத்திய அரசு தடை விதித்திருந்தது. கொரோனா தொற்று கட்டுக்குள் வந்த பின்னர் சில நாடுகளுக்கான விமான சேவைக் கட்டுப்பாடுகள் பின்னர் தளர்த்தப்பட்டன.

தற்போது கொரோனா பரவல் மேலும் குறைந்துள்ளமையை அடுத்து, இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு வழக்கமான சர்வதேச விமான சேவை மீண்டும் தொடங்கியுள்ளது. 27 நாடுகளில் உள்ள 43 இடங்களுக்கு வாரத்திற்கு மொத்தம் 1,466 புறப்பாடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன என்று மத்திய விமானப் போக்குவரத்து இயக்குநரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு கோடை கால அட்டவணையின்படி வாரத்திற்கு 3,200க்கும் மேற்பட்ட விமானங்களின் புறப்பாடுகள் இந்தியாவில் இருந்து நடைபெறும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## வான் எதிர்ப்பு ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதனை செய்தது இந்திய இராணுவம்



தரையில் இருந்து வானில் உள்ள இலக்குகளை துல்லியமாக தாக்கி அழிக்கும்,வான்எதிர்ப்புஏவுகணையை இந்திய இராணுவம் நேற்று வெற்றிகரமாக சோதனை செய்துள்ளதாக இந்திய பாதுகாப்புத் துறை அறிவித்துள்ளது.

ஒடிசாவின்பாலாசோர்கடற்கரையில் இருந்து ஏவப்பட்ட இந்த ஏவுகணை, வான் இலக்கை துல்லியமாக அழித்ததாக இந்திய மத்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (டி.ஆர்.டி.ஓ.) தெரிவித்துள்ளது. இந்த ஏவுகணை, இந்திய ராணுவத்தில் ஓர் அங்கமாக உள்ளது என்றும், சோதனை யின் போது தொலைவில் இருந்த இலக்கை நேரடியாக தாக்கிய தாகவும் டி.ஆர்.டி.ஓ. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## இந்தியாவின் ஏற்றுமதி 400 பில்லியன் டொலரை கடந்தது மனதின் குரல் வானொலி நிகழ்ச்சியில் மோடி பெருமிதம்

இந்தியப் பிரதமர் மோடியின் 87 ஆவது மனதின் குரல் வாயிலாக பேசுகிறேன் நிகழ்ச்சி நேற்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பானது. அதில் உரையாற்றிய பிரதமர் மோடி, கடந்த வாரத்தில் நாம் ஒரு சாத னையை எட்டி இருக்கிறோம். அது என்ன வெனில், 400 கோடி பில்லியன் டொலர் (இந்திய ரூபாயில் 30 லட்சம் கோடி) என்ற ஏற்றுமதி இலக்கை இந்தியா எட்டியுள்ளது. நமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் அயல் நாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுவதையே இது காட்டுகிறது.

உதாரணத்துக்கு, தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் வாழைப்பழங்கள் அதிகளவில் அரேபியாவில் கிடைக்கின்றன. அது போலவே ஹிமாச்சல், உத்தரகாண்ட் மாநிலத்தில் விளையும் சிறுதானியங்கள் டென்மார்க் நாட்டில் கிடைக்கின்றன. இவை மட்டுமல்லாது ஆந்திரப்பிரதேசத்தின் கிருஷ்ணா மற்றும் சித்தூர் மாவட்டங்களில் பங்கனபல்லி, சுவர்ணரேகா மாம்பழ ரகங்கள் தென்கொரியாவுக்கு அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்று பட்டியலிட்டு பெருமிதம் தெரிவித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சர்வ முஸ்லிம் கட்சி மாநாட்டைக் கூட்ட 'கிழக்கின் கேடயம்' அமைப்பு அழைப்பு

(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முறையாக அணுகி எவ்வகையான பிரச்சினைகள் உள்ளன என்பது தொடர்பில் ஆராய்ந்து தொகுப்பதும், அதற்கான தீர்வுகள் என்ன என்பதைப் பற்றி தலைவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து கலந்துரையாடி தீர்மானத்தை மேற்கொண்டு அவற்றை ஆவணப்படுத்துவதும் காலத்தின் தேவையாக உள்ளது. இது தொடர்பில் ஆராயும் சர்வ முஸ்லிம் கட்சி மாநாடு ஒன்றை அவசரமாக கூட்டி இவ்விடயத்தை மேற்கொண்டு செய்யுமாறு கிழக்கின் கேடயம் இலங்கை நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு உட்பட ஐக்கிய சமாதான கூட்டமைப்பு, நல்லாட்சிக்கான தேசிய முன்னணி போன்ற இலங்கையில் உள்ள முஸ்லிம் கட்சிகள் சகலவற்றையும், அத்துடன் இலங்கை நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகலரையும் கேட்டுக் கொள்கிறது.

கிழக்கின் கேடயம் கிலக்கின் கேடயம் KIZHAKKIN KEDAYAM



இவ்வாறு கோரும் கடிதம் ஒன்றை கிழக்கின் கேடயம் அமைப்பு மேற்படி கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ளது.

அந்த அமைப்பின் சார்பில் அக்கரைப்பற்று மாநகரசபை உறுப்பினர் எஸ்.எம்.சபீஸ் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

எமது நாட்டில் வாழும் முஸ்லிங்களுக்கு காணிப்பிரச்சினைகள், முஸ்லிம் பெண்களின் ஆடை உரிமை, 'ஒரே நாடு – ஒரே சட்டம்', விவாக – விவகாரத்து சட்ட திருத்தம், அரபு கலாபீடங்கள் மற்றும் குர்ஆன் மத்ரஸாக்கள் மீதான கெடுபிடி, இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் உட்பட உயர் அதிகாரிகளுக்கு இடம் பெறும் அநீதிகள், விவசாய நிலங்களில் உள்ள பிரச்சினைகள், கல்முனை, வாழைச்சேனை, மூதூர், தோப்பூர் போன்ற பிரதேசங்களில் உள்ள பிரதேசசெயலகங்களின் பிரச்சினைகள், இனப் பிரச்சினை, அரசியல் தீர்வில் முஸ்லிம்களின் வகிபாகம், புதிய அரசமைப்பில் முஸ்லிம்களின் உரிமைகளை உறுதிப்படுத்தல், சாய்ந்தமருது, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, காத்தான்குடி போன்ற பல்வேறு பிரதேசங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் உருவாக்கம் மற்றும் தரமுயர்த்தல்கள், அரசியல் பழிவாங்கல்கள், தேசிய ரீதியாக உள்ள முஸ்லிங்களின் பூர்வீக நிலங்கள் கொள்ளையிடப்படுகின்றமை, முஸ்லிம் வாழ்வியல் ரீதியிலான பிரச்சினைகள், கொழும்பு, கண்டி போன்ற இடங்களில் முஸ்லிம் பாடசாலைகளை அதிகரித்தல் மற்றும் கல்வி மேம்பாட்டு விடயங்கள், பொதுபல சேனாவின் முஸ்லிம்களுக்கு எதிரான காய் நகர்த்தல்கள், நாட்டின் பொருளாதார மீட்சிக்கான ஆலோசனைகள், விவசாயிகளின் உரப்பிரச்சினை, இளைஞர்களின் வேலைவாய்ப்புகளுக்கான திட்டமிடல்கள் உட்பட எண்ணிலடங்காத பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றை துறைசார்ந்த நிபுணர்களின் உதவியுடன் ஆலோசிக்க வேண்டிய தேவை இருக்கிறது.

சகல முஸ்லிம் கட்சிகளும் ஒரே மேசையில் அமர்ந்து, முஸ்லிம்கள் தேசிய ரீதியாக அனுபவித்துவரும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து தீர்வை பெற்றுக்கொடுக்கவேண்டிய காலம் கனிந்துள்ளது. இவ்விடயத்தில் அவசரமாக செயற்பட்டு, முஸ்லிம்களின் நிம்மதியான வாழ்வுக்கான செயற்பாடுகளை துரிதப்படுத்துமாறு கேட்டுக் கொள்வதுடன் முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பில் கொள்கை திட்ட வரைவை வரையுமாறு கோருகிறோம். இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல எங்களால் முடியுமான சகல ஒத்துழைப்புக்களையும் எந்த நேரத்திலும் செய்ய தயாராக இருக்கிறோம் – என்று உள்ளது.

அண்மையில் இந்தியப் பிரதமருக்கு கடிதம் அனுப்ப சிறுபான்மை கட்சிகள் ஒன்றிணைந்த போது அவற்றுக்கு ஆதரவாக கரம்கோர்த்த முஸ்லிம் தலைவர்கள், தமது சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்க்க அரசியல் வேற்றுமைகள் மறந்து முஸ்லிம் சமூகத்தின் இருப்பு மற்றும் நலனுக்காக ஒன்றிணைந்து செயற்படுவது காலத்தின் தேவையாக உள்ளது எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.



## திருகோணமலை ஆயுள்வேத வைத்தியசாலைக்கு சுதேச மருத்துவ மாகாண ஆணையாளர் விஜயம்

(பைல் இஸ்மாயில்)

திருகோணமலை கோபாலபுரம் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலைக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.முரளிதரன் மற்றும் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் ஆகியோர் விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

குறித்த விஜயத்தின்போது, வைத்தியசாலையில் நிலவுகின்ற குறைபாடுகள் மற்றும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளை பார்வையிட்டமையுடன், சிகிச்சை வழங்கப்படுகின்ற முறைமை தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார். பின்னர், வைத்தியசாலையில் நிலவுகின்ற குறைபாடுகள் தொடர்பிலும் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.நிரஞ்சன் மற்றும் குறித்த வைத்தியசாலையின் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோர்களிடம் கேட்டறிந்து கொண்டனர். இந்த விஜயத்தை மேற்கொண்ட சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் ஆகியோரினால் மூலிகை மரக்கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## குப்பைகளைத் தரம் பிரித்து சேகரிக்க கல்முனையில் தனித்தனி நிறப் பைகள்

### மாநகர சபையினால் அறிமுகம்



கல்முனை மாநகர சபை எல்லையினுள் குப்பைகளைத் தரம்பிரித்துச் சேகரிப்பதற்காக மாநகர சபையால் விசேட பைகள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினருடனான விசேட கலந்துரையாடல், மாநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில், மேயர் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

சமையலறைக் கழிவுகள், உணவுக் கழிவுகள், மரக்கறி, இலை, குழைகள் போன்ற உக்கக்கூடிய கழிவுகளை சேகரிப்பதற்காக பச்சை நிறப் பையும், இவை தவிர, பிளாஸ்டிக், பொலித்தீன், டின்கள் மற்றும் உக்க முடியாத கழிவுகளை வேறாக சேகரிப்பதற்காக மஞ்சள் நிறப் பையும் என்ற அடிப்படையில் இரு நிறங்களிலான பைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இவ்விரண்டு பைகளையும், மாநகர சபையின் பழைய கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள சுகாதாரப் பிரிவு அலுவலகத்தில் மொத்தமாக 100 ரூபா பணம் செலுத்தி, பொதுமக்கள் கொள்வனவு செய்து கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருமலை மாவட்டத்தில் இவ்வாண்டில் இதுவரை புதிதாக 27 காச நோயாளிகள்

திருகோணமலை மாவட்டத்தில் இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரை 27 புதிய காச நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என திருகோணமலை மாவட்ட சுவாச நோயியல் பிரிவின் வைத்தியர் சுரேஷ்குமார் தெரிவித்தார்.

திருகோணமலை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

திருகோணமலை மாவட்டத்தில் ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் 27 புதிய காச நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். 2021 ஆம் ஆண்டு 100 நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ள நிலையில், காச நோயாளிகளின் எண்ணிக்கை இவ்வருடம் அதிகரித்துள்ளது. மேலும், சுவாச நோயினால் ஏற்படும் காச நோயால் பாதிக்கப்பட்ட அதிக எண்ணிக்கையான நோயாளிகள் திருகோணமலை மாவட்டத்தில் உப்புவெளி, கிண்ணியா, மூதூர் மற்றும் கோமரங்கடவல ஆகிய பிரதேசங்களிலேயே இனங்காணப்பட்டுள்ளனர் – என்றார்.

## கட்டுத்துவக்குடன் பெண் ஒருவர் கைது

திருகோணமலை சீனக்குடா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சமன்புர பிரதேசத்தில் கட்டுத்துவக்கு மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவரைத் தாங்கள் கைது செய்துள்ளோம் என சீனக்குடாப் பொலிஸார் தெரிவித்தனர்

சீனக்குடாப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து நேற்று முன்தினம் காலை மேற்படி வீட்டை சோதனையிட்டபோது அங்கு அனுமதிப்பத்திரம் இன்றி வைத்திருந்த கட்டுத்துவக்கு ஒன்றும் 100 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர். சோதனைக்கு உட்படுத்தப்பட்ட வீட்டில் இருந்து 33 வயதுடைய பெண்ணொருவர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளார். அந்தப் பெண் வழங்கிய வாக்குமூலத்தின் படி கைப்பற்றப்பட்ட கட்டுத்துவக்கு மற்றும் ஹெரோயின் போதைப் பொருள் அவரது தந்தையுடையது என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. தனது தந்தை அச்சமயம் வீட்டில் இருக்கவில்லை எனவும் வேலை நிமித்தம் கொழும்புக்குச் சென்று இருந்தார் எனவும் அந்தப் பெண் வாக்குமூலம் அளித்துள்ளார்.

# இலங்கை – இந்திய அணிகளுக்கிடையிலான குத்துச்சண்டை முல்லைத்தீவு வீராங்கனை தங்கப்பதக்கம் வென்று சாதனை!





INTERNATIONAL BRAVE BOXING COUNCIL நடத்திவருகின்ற குத்துச்சண்டைப் போட்டித்தொடர்களில், இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கிடையிலான PRO BOXING CHAMPIONSHIPS 2022 போட்டிகள் சென்னை மதுரவாயிலில் நடைபெற்றன.

இந்தத் தொடரில், இலங்கை அணியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.சிறீதர்சன் ரி.நாகராஜா ஆகிய இரண்டு வீரர்களும், முல்லைத்தீவைச் சேர்ந்த ஈ.கிருஸ்ணவேணி, வை.நிதர்சனா ஆகிய இரண்டு வீராங்கனைகளும் இடம்பெற்று போட்டியிட்டிருந்தனர்.

ஆசிரியர் நந்தகுமார் அவர்களிடம் பயிற்சி பெற்ற குறித்த நான்கு மாணவர்களில் மூவர் தங்கப் பதக்கங்களையும் ஒருவர் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றனர்.

போட்டியில் பங்குபற்றிய முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு கைவேலி மருதமடு பகுதியில் வசிக்கும் யோகராசா நிதர்சனா என்ற தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வரும் குத்துச்சண்டை வீராங்கனையும் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்து முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளார்.



# ஆர்ஜென்டினா ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்தார் மெஸ்ஸி

கட்டார் நாட்டில், வரும் நவம்பர் 21 முதல் டிசெம்பர் 18 வரையில் பீபா உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் நடைபெறவுள்ளது. தற்போது தகுதிச் சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன இதுவரை மொத்தம் 19 அணிகள் உலகக் கிண்ணத்தொடரில் விளையாடுவதற்குத் தகுதி பெற்றுள்ளன. அவற்றில் தென்னமெரிக்க நாடான ஆர்ஜென்டினாவும் ஒன்று.

வெனிசுவெலா நாட்டுக்கு எதிரான தகுதிச் சுற்றில் 3 - 0 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்டினா வெற்றி பெற்று உலகக் கிண்ணப் பிரதான தொடருக்குள் நுழைந்துள்ளது.

கால்பந்தாட்ட உலகின் புகழ்பெற்ற வீரர்களில் ஒருவரான ஆர்ஜென்டினாவின் மெஸ்ஸி, இந்த வெற்றிக்கு பிறகு மைதானத்தில் திரளாக திரண்டிருந்த சொந்த நாட்டு ரசிகர்களுக்கு உணர்ச்சிபூர்வமாக நன்றி தெரிவித்துள்ளார். வெனிசுவெலாவுக்கு எதிரான இந்தப் போட்டியில் 82 ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றை அடித்திருந்தார் மெஸ்ஸி.

ஆர்ஜென்டினா அணிக்கும் மக்களுக்கும் இடையிலான பிணைப்பு இம்மி அளவு கூடக் குறையவில்லை. கோபா அமெரிக்கத் தொடரை நாங்கள் வென்றது முதலே நான் மகிழ்ச்சியுடன் இருந்து வருகிறேன். மக்கள் என் மீது அவர்கள் வைத்துள்ள அன்பை வெளிப்படுத்திவருகிறார்கள். அதற்கு நான் என்றென்றும் நன்றியுள்ளவனாக இருப்பேன்.

அது இயற்கையாக அமைந்த ஒன்று. களத்திற்கு உள்ளேயும் வெளியேயும் என எங்கு சென்றாலும் அதனை நான் உணர்ந்து வருகிறேன், என மெஸ்ஸி தெரிவித்துள்ளார்.

# ஐ.பி.எல். தொடரில் 170 விக்கெட்டுக்கள் மலிங்க சாதனையை பிராவோ எட்டினார்




ஐ.பி.எல். 2022 தொடரின் கொல்கத்தா அணிக்கு எதிரான ஆரம்பப் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வீரர் பிராவோ 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன் மூலம் ஐ.பி.எல். தொடரில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய மலிங்கவை அவர் சமப்படுத்திக்கொண்டுள்ளார். மலிங்க, 122 போட்டிகளில் விளையாடி 170 விக்கெட்டுக்களையும், பிராவோ 152 போட்டிகளில் 170 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளனர்.

# டென்னிஸ் தரவரிசையில் முதலிடம் போலந்தின் ஸ்வியாடெக் பிடித்தார்

உலக டென்னிஸ் தரவரிசையில் முதல் நிலை அந்தஸ்தை போலந்தின் இகா ஸ்வியாடெக் எட்டியுள்ளார். அமெரிக்காவில் நடந்துவரும் மியாமி டென்னிஸ் தொடரின் இரண்டாவது சுற்றில் வெற்றி பெற்றதன் மூலம் நம்பர் வன் இடத்திற்கு தகுதியுடையவராக மாறியிருக்கிறார்.

உலகின் முதல் நிலை டென்னிஸ் வீராங்கனையாகவிருந்த ஆஸ்திரேலியாவின் அஷ்லெ பார்ட்டி சில தினங்களுக்கு முன்பு தனது 25 வயதிலேயே டென்னிஸில் இருந்து ஓய்வு பெற்றார். அடுத்த முதல் நிலை வீராங்கனை யார் என்ற கேள்வி எழுந்த நிலையில், அந்த அந்தஸ்தை போலந்தின் இகா ஸ்வியாடெக் எட்டியுள்ளார்.



இதுவரை இரண்டாவது இடத்தில் இருந்த அவர் அமெரிக்காவில் நடந்து வரும் மியாமி டென்னிஸ் தொடரின் இரண்டாவது சுற்றில் வெற்றி பெற்றதன் மூலம் போதியளவு புள்ளிகளோடு நம்பர் வன் இடத்திற்கு முன்னேறியிருக்கிறார்.

முதலிடத்தை பிடித்த முதல் போலந்து நாட்டவர் என்ற சாதனையை படைத்திருக்கும் 20 வயதான ஸ்வியாடெக், இந்த நிலையை எட்டுவேன் என்று கற்பனை செய்துகூடப் பார்க்கவில்லை. உண்மையில் இதை நம்பவே முடியவில்லை, என்று கூறியுள்ளார்.

அஷ்லெ பார்ட்டி 7,980 புள்ளிகளோடு ஓய்வுபெற்றுவிட்ட நிலையில், இகா ஸ்வியாடெக் 5,776 புள்ளிகளோடு தற்போது முதலிடத்திலும், மரியா சக்காரி 5,085 புள்ளிகளோடும், பார்பொரா 5,033 புள்ளிகளோடும் இரண்டாவது, மூன்றாவது இடங்களிலும் உள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# கடத்தப்பட்டுள்ள மகன் தொடர்பான விசாரணையில் பொலிஸார் அசமந்தம்!

## தாயார் குற்றச்சாட்டு



எனது மகன் கடத்தப்பட்டுள்ளார். ஆதாரங்கள் இருந்தும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என கடந்த ஜனவரி 27 ஆம் திகதி காணாமல்போன பாலகிருஸ்ணன் நிரேஸ் என்ற வவுனியா இளைஞனின் தாயார் கணேஸ் பாலகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எனது மகன் பாலகிருஸ்ணன் நிரேஸ் கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி காணாமல் போனார். அவர் தனது வீட்டில் இருந்து புறப்பட்டு குருமன்காடு பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு முன்னால் தனது மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு அந்த வர்த்தக நிலையத்துக்குச் சென்றுள்ளார். அதன்பிறகு அவன் தனது மோட்டார் சைக்கிளை எடுப்பதற்கு வெளியில் வரவில்லை. அவரது மோட்டார் சைக்கிளை வேறு ஒருவர் வந்து எடுத்துச் செல்வதை சி.சி.ரி.வி. வீடியோவில் காண முடிகிறது.

இதனை நான் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளேன். இது தொடர்பில் நான் ஜனவரி 29 ஆம் திகதி வவுனியா பொலிஸ் நிலையத்தில் சிறு குற்றத்தடுப்பு பிரிவில் எனது மகனை காணவில்லை என நான் முறைப்பாடு செய்தேன். ஆனால் எனது மகன் இரண்டுநாளாக வீட்டிற்கு வரவில்லை என தான் முறைப்பாட்டு கொப்பியில் எழுதப்பட்டுள்ளது.

நான் கொழும்பிலும் இது தொடர்பில் அண்மையில் முறைப்பாடு செய்துள்ளேன், பொலிஸார் தேடிக் கொண்டிருக்கிறோம் என கூறுகிறார்களே தவிர, இரண்டு மாதங்களுக்குள் எந்தவித உறுதியான பதிலும் எனக்குக் கிடைக்கவில்லை. செட்டி குளத்தில் இருந்து நபர் ஒருவர் என்னிடம் 15 லட்சம் கப்பம் கோரினார், மூன்றரை லட்சம் உடனடியாகத் தந்தால் மகனை விடுவிப்பேன் என கூறியிருந்தார்.

அவர் பொலிஸ் முறைப்பாட்டு துண்டின் பிரதி, மகனின் போட்டோ, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் அவர்களின் கடிதம் என்பவற்றை தருமாறு கோரினார். நாம் குறித்த நபரின் குரல் பதிவை பதிவு செய்து பொலிஸாரிடம் கொடுத்தோம்.

அதனடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். போதியளவிலான ஆதாரம் இல்லை என அவரை விடுவித்துள்ளோம் என கூறுகிறார்கள். ஆனால் அந்த நபரை விசாரித்தால் எனது மகனைக் கண்டுபிடிக்க முடியும்.

எனது மகன் குருமன்காடு பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் தனது இரண்டரை வருட உழைப்பு பணத்தை வழங்கியுள்ளார். மேற்படி வர்த்தக நிலையத்தின் முகாமையாளிடம் 85, 90 லட்சம் ரூபா வரை செலுத்தியுள்ளார். தனது 30 ஆவது வயதில் மகன் புதிய தொழில் செய்யத் திட்டமிட்டு இருந்தார்.

அந்தப் பணத்தைக் கேட்டு சென்ற போது தான் அவர் கடத்தப்பட்டுள்ளார். இதுவரை அவரை விடவில்லை. இரண்டு மாதம் கடந்து விட்டது. நான் ஒவ்வொரு இடமாகத் தேடி வருகின்றேன். ஊடகங்கள் மூலமாவது நீதி கிடைக்குமா என நம்பித் தான் இங்கு வந்துள்ளேன்.

எனது மகனை பிடித்து வைத்திருக்கிறார்கள். அவரை வைத்து என்ன செய்கிறார்களோ தெரியாது? எனது மகனின் மோட்டார் சைக்கிளும் இதுவரை இல்லை. அவரது வங்கி அட்டைகளும் இல்லை. அவரது வங்கிக் கணக்குகளை பொலிஸாரிடம் கொடுத்தோம்.

அவர்கள் பார்க்கிறோம் என்கிறார்கள். ஆனால் எதுவும் நடந்ததாக தெரியவில்லை. குறித்த வர்த்தக நிலையத்திற்கு சென்ற நிலையிலேயே அவரை காணவில்லை. அதனால் அதன் உரிமையாளர் மற்றும் முகாமையாளர் தான் இதற்கு பதில் சொல்ல வேண்டும்.

எனது மகன் தனது நண்பர் ஒருவரின் 5 லட்சம் ரூபா பணத்தை வாங்கி குறித்த வர்த்தக நிலையத்துக்கு வழங்கியுள்ளார். எனது மகன் காணாமல்போன பின் மகனின் நண்பர் அந்த வர்த்தக நிலையத்துக்குச் சென்று தனது 5 லட்சம் ரூபா பணத்தைத் தருமாறு கோரினார். இதன்போது நிரேஸ் கொடுக்கச் சொன்னது என்று கூறி 5 லட்சம் ரூபா பணத்தைக் கொடுத்துள்ளனர்.

எனது மகன் காணாமல் போன பின் தான் இந்தச் சம்பவம் நடந்தது. மகன் பணத்தை எப்போது கொடுக்கச் சொன்னவர் என்பதை அறிய வேண்டும். எனவே, எனது மகன் கடத்தப்பட்டுள்ளார். அவரை கண்டுபிடிக்க பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். – எனத் தெரிவித்தார்.

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்குழு கூட்டம் மட்டக்களப்பில்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம், கூட்டணியின் தலைவர் த.ராஜலிங்கம் தலைமையில் மட்டக்களப்பு கல்லடியில் இடம் பெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளரும், மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினருமான வ.குபேரன் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.யோகராஜா, இணைப் பொருளாளர்களான வ.சந்திரன், தி.சம்பந்தன், நிர்வாகச் செயலாளர் கௌரிகாந்தன் உள்ளிட்ட வடக்குக் கிழக்கைச் சேர்ந்த கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது கட்சியின் எதிர்கால செயற்பாடுகள், கட்சி முகங்கொடுக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன். முக்கிய பல தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

தமிழ்த் தேசியத்தோடு இணைந்து செயற்படும் கட்சிகளுடன் கூட்டிணைந்து செயற்படுவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளல், கட்சியின் யாப்பில் திருத்தங்களை மேற்கொண்டு பொதுச் சபை அங்கீகாரத்துடன் மாற்றியமைத்தல், ஆனந்தசங்கரி தனிப்பட்ட நலனுக்காக கட்சியினைபின்னடையச்செய்தமை மட்டுமல்லாது கட்சி உறுப்பினர்களைத் தவறான முறையில் வழிநடத்தியமை மற்றும் கட்சி அலுவலகத்தைத் தனிப்பட்ட நலன்கருதி பயன்படுத்துகின்றமை போன்ற செயற்பாடுகள் தொடர்பில் ஒழுக்காற்றுக் குழுவினூடாக அவர்மீது சட்ட நடவடிக்கை எடுத்தல், தமிழ்த் தலைவர்களின் உருவச் சிலைகளை நிர்மானிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடன் இணைந்து செயற்பட்டு அவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்காகப் பணியாற்றல், தற்போது மக்களின் அவல நிலையைக் கருத்திற் கொண்டு அதற்கேற்ற நடைமுறைகளை முன்னெடுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டவுடன் அனல் மின் உற்பத்தி நிலையங்கள் இயங்கும்

## காமினி லொக்குகே கூறுகிறார்

நாட்டுக்கு தேவையான மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறித்த மசகு எண்ணெய் தொகை கிடைக்கப்பெற்றவுடன் அனல் மின் உற்பத்தி நிலையங்கள் எவ்வித தடையும் இன்றி இயங்கும் என்று வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் எரிபொருள் நெருக்கடி காணப்படுகிறது என்றால் அதனை துறையுடன் தொடர்புடைய அமைச்சர் எதிர்கொள்ள வேண்டும். அதனை விடுத்து எரிபொருளைப் பெறுவதற்கு பணம் இல்லை என்று கூறிக் கொண்டிருப்பது பொருத்தமற்றது. முன்னாள் அமைச்சர் இதனையே செய்து கொண்டிருந்தார். முன்னாள் வலுசக்தி அமைச்சர் எதிர்வரும் ஒன்று அல்லது இரண்டு நாள்களூக்கு போதுமானளவு எரிபொருளே காணப்படுகிறது என்று தினந்தோறும் ஊடகங்களிடம் தெரிவித்துக் கொண்டிருந்தார்.

ஆனால் நாம் அந்த சவாலை ஏற்று அதற்கேற்ப செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். தமிழ் – சிங்கள புத்தாண்டை அண்மிக்கும் போது எரிபொருள் வரிசை நிறைவுக்கு வரும். மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மசகு எண்ணெய் கிடைக்கப் பெற்றவுடன் அனல் மின் உற்பத்தி நிலையங்கள் எவ்வித தடையும் இன்றி இயங்கும்.– என்றார்.

# நுணாவில் முன்பள்ளி விளையாட்டு நிகழ்வு!





கைதடி, நுணாவில் தேன் ஒளி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை கதிரொளி சனசமூக நிலைய முன்றிலில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக சமூக சேவகர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி கலந்து சிறப்பித்தமையுடன், சிறப்பு விருந்தினராகக் கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை அதிபர் தங்கவேலுவும் கௌரவ விருந்தினராக சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் மதன்ராஜும் கலந்துகொண்டனர். நிகழ்வில் சிறுவர்களின் மகிழ்வூட்டும் விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றமையுடன் விருந்தினர்களின் உரைகளைத் தொடர்ந்து அவர்களால் சிறார்களுக்குப் பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.03.2022இல் வெளியிடப்பெற்றது.